**DEPOSITION OF WITNESS**
**(Chapter XXIII Code of Criminal Procedure)**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE OF KARUR.**

| | | | |
|---|---|---|---|
| Sessions Case No. | : | 56/2023 | |
| | : | Prosecution - | **PW-5** |
| Deposition of witness for | : | Defense | |

| | | | | |
|---|---|---|---|---|
| Name | : | பொன்னுச்சாமி | Father's Name : | |
| Village | : | | Taluk | : |
| Caste | : | | Calling | : |
| Religion | : | | Age | : |

Solemnly affirmed in accordance with the Provisions of Act 44 of 1969 of the 06th day of August 2025.

ஆரம்பிக்கும் நேரம் **5.10** மணி

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

**முதல் விசாரணை**

நான் கரூர், செல்வநகரில், ஆண்டாங்கோவில் கீழ்பாகத்தில் குடியிருக்கிறேன். எனக்கு சாலிபாளையம் சொந்த ஊர். சாலிபாளையத்தில் என் தாயார் உள்ளார். நான் பேருந்து ஓட்டுநராக இருந்து பணிஓய்வு பெற்றுள்ளேன். நான் 11.09.2022 ஆம் தேதியன்று காலை 6 மணிக்கு சாலிபாளையம் கிராமத்திற்கு என் தாயாரை பார்க்க சென்றேன். அப்போது காளிபாளையம் அருகில் காவல் ஆய்வாளர் என்னை நிறுத்தி துாள் சண்முகம் காட்டிற்கு அழைத்து சென்று 10.09.2022 அன்று ஜெகநாதன் கொலை சம்மந்தமாக பார்வை மகஜரும் மற்றும் கைப்பற்றுதல் மகஜரும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள் அதற்கு நான் ஒப்புக்கொண்டேன். மேலும், ராஜ்குமாரையும் சாட்சியாக இருக்கும்படி கேட்டார்கள். ராஜ்குமார் மாரிக்கவுண்டம்பாளையத்தை சார்ந்தவர். ராஜ்குமார் சாட்சியாக இருந்தார். சாலையின் வலதுபக்கம் ஒரு இருசக்கர வாகனம் அடிபட்டு கிடந்தது. காட்டிற்குள் பிக்கப் வேன் ஒன்று இருந்தது. அதனை பார்வையிட்டு

ஆய்வாளர் ஒரு பார்வை மகஜரும், மேற்சொன்ன வாகனங்கள் ஒரு கைப்பற்றுதல் மகஜரும் தயார் செய்தனர். மேற்சொன்ன இரண்டு மகஜர்களிலும் நானும், ராஜ்குமாரும் சாட்சியாக கையொப்பம் செய்தோம். **பார்வை மகஜரில் உள்ள முதலில் உள்ள கையொப்பம் என்னுடையது, அது அ.த.சா.ஆ.11 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த பார்வை மகஜர் இதுதான். அது அ.த.சா.ஆ.12 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இருசக்கர வாகனத்தினையும், ஜீப்பையும், ரத்தம் படிந்த மண்ணையும், ரத்தம் படியாத மண்ணையும், வண்டியில் இருந்து ஆர்.சி.புக் ஆகியவற்றை ஆய்வாளர் எங்கள் முன்பு கைப்பற்றினார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், ராஜ்குமார் ஆகியோர் சாட்சியாக கையொப்பம் செய்தோம். அன்று கைப்பற்றிய பிக்கப் வேனின் புகைப்படம் இதுதான், அது ஏற்கனவே அ.த.சா.ஆ.3 ஆக ஏற்கனவே குறியீடு செய்யப்பட்டுள்ளது. அந்த இருசக்கர வாகனத்தின் புகைப்படம் ஏற்கனவே அ.த.சா.ஆ.4 வரிசையாக ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. ரத்தம் படிந்த மண் இது தான். **அது சா.பொ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது. ரத்தம் படியாத மண் இதுதான்.**

**அது சா.பொ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** கைப்பற்றுதல் மகஜரில் உள்ள கையொப்பம் இதுதான், **அது அ.த.சா.ஆ.13 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான். **அது அ.த.சா.ஆ.14 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** 16.09.2022 ஆம் தேதி க.பரமத்தி காவல் நிலையத்தில் என்னை அழைத்தார்கள், நான் சென்றேன். பிக்கப் வண்டியில் பானெட்மேல் இருந்த ரத்தத்தை சுரண்டி ஆய்வாளர் எடுத்தார். மருத்துவமனையில் இருந்த ஜெகநாதனின் ரத்தத்தை ஒரு ஈரத்துணியில் நனைத்து அதனை ஆய்வாளர் கைப்பற்றினார். அன்று கைப்பற்றிய ஜெகநாதனின் **ரத்த மாதிரி எடுத்த துணி இதுதான், அது சா.பொ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** **சுரண்டப்பட்ட பானெட் மீதிருந்த ரத்தத்துடன் கூடிய பெயிண்ட் இதுதான், அது சா.பொ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ஆய்வாளர் இரண்டு பொருட்களையும் எடுத்து ஒரு கைப்பற்றுதல் மகஜர் தயார் செய்தார். அந்த கைப்பற்றுதல் மகஜரில் நானும், ராஜ்குமாரும் கையொப்பம் செய்தோம். **முதலில் உள்ள கையொப்பம் என்னுடையது, அது அ.த.சா.ஆ.15 ஆக குறியீடு**

**செய்யப்படுகிறது. அந்த கைப்பற்றுதல் மகஜர் இதுதான், அது அ.த.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இது தொடர்பாக காவல்துறை என்னை விசாரித்தார்கள். அந்த பிக்கப் வாகனம் இதுதான். பிக்கப் வாகனம் ஏற்கனவே சா.பொ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுளளது. அந்த இருசக்கர வாகனம் இதுதான், அது ஏற்கனவே சா.பொ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**முடியும் நேரம் 5.25 மணி**

**1 முதல் 3 எதிரிகள் தரப்பில் பொதுவான குறுக்கு விசாரணை**

**ஆரம்பிக்கும் நேரம் 5.25 மணி**

உங்கள் அம்மாவும், இறந்துபோன ஜெகநாதன் பெற்றோர்களும் சகோதர, சகோதரி முறை என்றால் சரியல்ல. நீங்கள் ஜெகநாதன் அத்தை மகன் என்றால் சரியல்ல, எங்கள் சித்தப்பா குடும்பத்தினர் ஜெகநாதனின் தகப்பனாரின் தங்கச்சியை திருமணம் செய்துள்ளார். நான் ஜெகநாதனுக்கு பங்காளி முறை என்றால் மாமா முறை ஆகும். உங்கள் வீடு, உங்கள்

அம்மா இருக்கும் வீடான குப்பம் கிராமத்திற்கு எவ்வளவு தூரம் என்றால் 35 கி.மீ., இருக்கும். வாரா வாரா எத்தனை மணிக்கு உங்கள் அம்மாவை பார்க்க செல்வீர்கள் என்றால் என் அம்மா அழைத்தால் எந்த நேரமானலும் செல்வேன். பொதுவாக கிராமத்திற்கு செல்ல எத்தனை மணிக்கு வீட்டில் இருந்து கிளம்புவீர்கள் என்றால் என் அம்மா வயதானவர்கள், தீடிரென்று பக்கத்து வீட்டில் இருந்து என்னை போன் பண்ணி அழைத்தால் உடனே சென்றுவிடுவேன். காவல்துறையினர் விசாரித்தபோது எங்கள் அம்மா விசாரித்தார்கள் அதனால் சென்றேன் என்று கூறவில்லை என்றால் நான் வாரா வாரம் செல்வதால் நான் தாயாரை பார்க்க சென்றேன். குப்பம் கிராமம் உங்கள் சொந்த ஊர் என்பதால் அந்த வழி நன்கு தெரியும் என்றால் சரிதான். எங்கள் ஊருக்கு ஐந்து வழிகள் உள்ளது, அதில் ஒரு வழியில்தான் துாள் சண்முகம் காடு வழியாகும். துாள் சண்முகம் தோட்டத்து வழியாக அடிக்கடி செல்வேன். அந்த ரோடு நேராக உள்ளதா, ஒரு சில இடங்களில் வளைந்து உள்ளதா என்பது பற்றி உங்களுக்கு தெரியும் என்றால் சரிதான். துாள் சண்முகம் காடு இருக்கும் அந்த இடத்தை தெற்கே இருந்து வடக்கே

வரும் ரோடு லேசாக கிழக்குபுறம் வளைந்து உள்ளது என்றால் வளைவு இல்லை. துாள் சண்முகம் காட்டில் இருந்து 500 மீ. தள்ளிதான் ஒரு லேசான வளைவு இருக்கும். வளைவு திரும்பி சிறிது துாரம் சென்றால்தான் துாள் சண்முகம் காடு வரும். துாள் சண்முகம் காடும், ரோடும் சந்திக்கும் இடம் வளைவாக இருக்குமா என்றால் ராமசாமி காடு இருக்கும் இடத்தில்தான் வளைவு இருக்கும், துாள் சண்முகம் காட்டிற்கு ரோடு நேராகதான் இருக்கும். ராமசாமியின் காடு, துாள் சண்முகம் காட்டை ஒட்டி தெற்கில் ராமசாமி காடு உள்ளது என்றால் சரிதான். நீங்கள் 6 மணிக்கு போகும்போது எத்தனை நபர்கள் கூடியிருந்தார்கள் என்றால் நாங்கள் செல்லும்போது இரண்டு காவலர்களும், ஆய்வாளரும்தான் காலை 6 மணிக்கு 11 ஆம் தேதி இருந்தார்கள். நீங்கள், ஆய்வாளர், இரண்டு காவலர்கள் தவிர வேறு எத்தனை நபர்கள் சம்பவயிடத்தில் இருந்தார்கள் என்றால் ராஜ்குமார் இருந்தார். நீங்கள் போவதற்கு முன்னர் அனைத்தையும் பார்த்து எழுதிக்கொண்டிருந்தார்களா என்றால் நான் சென்ற பிறகுதான் என்னை கேட்டு பிறகு பார்வையிட்டு எழுதிக்கொண்டனர். அவர்கள்

பார்வையிட்டதை பார்த்து, அவர்கள் எழுதிக்கொண்டதை புரிந்து கொண்டேன். இரண்டு வண்டியையும் எதன் மூலம் எடுத்து சென்றார்கள் என்றால் எடுத்து சென்றபோது நான் பார்க்கவில்லை. உங்களை காவல் துறையினர் எத்தனை முறை விசாரித்தார்கள் என்றால் இரண்டு முறை விசாரித்தார்கள். உஙகளை காவல் துறையினர் இரண்டு முறை விசாரித்தபோதும், ஜெகநாதனின் ரத்தத்தை மருத்துவமனையில் எடுத்ததாக கூறவில்லை என்றால் சரியல்ல, ஈரத்துணியால் பானெட்டில் இருந்த ரத்தத்தை ஆய்வாளர் துடைத்து எடுத்தார். க.பரமத்தி காவல் நிலையத்தில் ஈரத்துணியால் ரத்தத்தை நனைத்து எடுத்தார்கள். நீங்கள் சொன்ன மாதிரி, சொன்ன நேரத்தில் 11.09.2022 ஆம் தேதியன்று காலை 6 மணிக்கு பார்வை மகஜரோ, கைப்பற்றுதல் மகஜரோ தயார் செய்யவில்லை என்று சொன்னால் சரியல்ல. 16.09.2022 ஆம் தேதி காவல் நிலையத்தில் வைத்து பானெட்டில் இருந்த ரத்தக்கறையோ உங்கள் முன்பாக காவல் துறையினர் கைப்பற்றவில்லை என்றும், இறந்துபோன ஜெகநாதன் உங்களுக்கு மாமா முறை என்பதால் உங்களை இந்த வழக்கில் பயன்படுத்திக் கொண்டார்கள்

என்றால் சரியல்ல. தூள் சண்முகம் காட்டிலிருந்து கரூர் - கோயமுத்தூர் மெயின்ரோடு எவ்வளவு தூரம் என்றால் 1 ½ கி.மீ. இருக்கும். கரூர் - கோயமுத்தூர் ரோடு கிழமேல் ரோடு என்றால் சரிதான். கரூர் - கோயமுத்தூர் ரோட்டில் மேற்குபுறம் சென்றால்தான் க.பரமத்தி காவல் நிலையம் வரும் என்றால் சரிதான். தூள் சண்முகம் காட்டிலிருந்து க.பரமத்தி காவல் நிலையம் தென்மேற்கில் உள்ளது என்றால் சரிதான்.

**முடியும் நேரம் 5.45 மணி**

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.

**S.C.No.56/2023** **PW 4 –** பெரியசாமி **06.08.2025**

**(1ம் எதிரி சக்திவேல், 2ம் எதிரி செல்வகுமார், 3ம் எதிரி ரஞ்சித்குமார் ஆகிய 1 முதல் 3 எதிரிகள் ஆஜர்)**

(குழந்தைகள் மற்றும் சாட்சிகள் விசாரணை மையத்திலிருந்து சாட்சி விசாரிக்கப்படுகிறார். எதிரிகள் திரைமறைவில் அமர வைக்கப்பட்டுள்ளனர். சாட்சி தனியறையில் அமர வைக்கப்பட்டு, திரை விலக்கப்பட்டு, விசாரணை கீழ்க்கண்டவாறு தொடரப்படுகிறது)

மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையின் உத்திரவு Crl.O.P.(MD) No.560 of 2025 நாள் 22.01.2025 சாட்சிகளை விசாரணை செய்ய உத்திரவிடப்பட்டு அதனடிப்படையில் சாட்சிகள் விசாரிக்கப்படுகிறார்.

ஆரம்பிக்கும் நேரம் **12.25** மணி

**1** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**(**வழக்கறிஞர் திரு**.**மாரியப்பன்**)**

இல்லை.

**2** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**(**மூத்த வழக்கறிஞர் திரு.இளையராஜா**)**

ஆரம்பிக்கும் நேரம் **12.35** மணி

நீங்கள் காளிபாளையத்தில் எத்தனை வருடங்களாக குடியிருக்கிறீர்கள் என்றால் நான் பிறந்த நாள் முதற்கொண்டு குடியிருந்து வருகிறேன். ராஜா விநாயகா புளூமெட்டல்ஸ் என்ற கிரசரில் 2020 ஆம் ஆண்டு வரை பங்குதாரராக இருந்தீர்கள் என்றால் சரிதான். ராஜா விநாயகா புளூமெட்டல்ஸ் என்ற நிறுவனம், செல்வகுமார் கிரசரில் இருந்து 2 கி.மீ. தள்ளி உள்ளது என்றால் 2 கி.மீ. தள்ளி உள்ளது. என் வீட்டிலிருந்து ராஜா விநாயகா 1 ½ கி.மீ. இருக்கும். என் வீட்டிற்கும், ராஜபாளையத்திற்கும் இடையே எந்தவொரு குவாரியும் இல்லை. அன்னை புளூமெட்டல்ஸ் சுற்றி நிறைய குவாரிகள் உள்ளது என்றால் அன்னை குவாரி மட்டும்தான் உள்ளது. அன்னை புளூமெட்டல்ஸ் சுற்றிலும், உங்கள் வீட்டிற்கு அருகாமையிலும் நிறைய குவாரிகள் உள்ளது என்றும், நீங்கள் இல்லை என்று சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல. ராஜா விநாயாக புளூமெட்டல்ஸ் என்ற நிறுவனத்திலிருந்து நீங்கள் விலகும்வரை நீங்கள் எந்தவொரு நிறுவனம் மீதும் மனு கொடுக்கவில்லை என்றால் ராஜா விநாயகா சிவில் நீதிமன்றத்தில் என்னுடைய பங்கு சம்மந்தமாக வழக்கு தொடர்ந்துள்ளேன், இன்றுவரை நானும் பங்குதாரராக உள்ளேன். நீங்கள் ராஜா விநாயகா

குவாரியில் இருந்து வெறும் ரூ.20,00,000/ பெற்றுக்கொண்டு அ.வ.எண்.160/2022 பங்கு கேட்டு வழக்கு நிலுவையில் உள்ளது என்று சொன்னால் சரிதான். நீங்கள் அதன்பிறகுதான் உண்மைக்கு புறம்பாக அங்கு சுற்றியுள்ள கிரசர், குவாரிகளுக்கு எதிராக மனு செய்து வருகிறீர்கள் என்று சொன்னால் சரியல்ல. 2019 ஆம் ஆண்டில் உங்கள் தோட்டத்திற்கு பக்கத்தில் உள்ள ஜெகநாதனுக்கும், இவ்வழக்கு எதிரிகளுக்கும் சண்டை நடந்ததாக சொல்லியுள்ளீர்கள், அதில் சம்பவ சாட்சியாக காவல் துறையினர் உங்களை சம்பவ சாட்சியாக சேர்க்கவில்லை என்று சொன்னால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்திற்கு பிறகு உங்களை அந்த இடத்தை பார்வையிடும்போது பார்வை மகஜர் சாட்சியாக போட்டுள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல, ஜெகநாதனை நான்தான் ரஜினி மருத்துவமனையில் கொண்டு சேர்த்தேன். அந்த வழக்கில் பார்வை மகஜர் சாட்சியாக போடும்போது எதிரி செல்வகுமார் தோட்டத்திற்கு செல்லும் வழியில் ஜெகநாதன் மண்குழி வெட்டும்போதுதான் தகராறு ஏற்பட்டது என்று சொன்னால் சரியல்ல. நீங்கள் முதல் விசாரணையில் கூறியதுபோல் இறந்துபோன ஜெகநாதன் 31.05.2019 ஆம் தேதியன்று ரஜினிகாந்த் மருத்துவமனைக்கு நான்தான் அழைத்து சென்றேன் என்பதுபோல் காவல்துறை விசாரணையில் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல, நான் காவல் துறையில் கூறியுள்ளேன், போட்டோ எடுத்து காவல் துறையில் கொடுத்துள்ளேன். இன்றுவரை காளிபாளையம் கிராமத்தில் 6 கிரசருக்கு

மேல் செயல்பாட்டில் இருந்து வருகிறது என்று சொன்னால் 6 கிரசருக்கு மேல் இருக்கும். வேறு எந்த கிரசர் மீதும், நீங்கள் எந்த புகாரும் கொடுக்கவில்லை என்பதால் ஆகஸ்ட் 15 ஆம் தேதி நீங்கள் கொடுத்த மனுவை தனிப்பட்ட விரோதம் காரணமாக புகார் கொடுக்கப்பட்டுளளது என்றும், அவர்கள் சட்டப்படி உரிமம் பெற்று நடத்தி வருகிறார்கள் என்று சொன்னால் சரியல்ல, 10 வருடமாக கிரசர் நடத்துவதற்கு உரிமம் இல்லை. உரிமம் இல்லாமல் செல்வகுமார் கிரசரை நடத்தி வந்தார் என்று இந்த வழக்கிற்காக பொய்யாக சொல்லுகிறீர்கள் என்றும், நீங்கள் சொல்வதுபோல அரசு அதிகாரிகள் கூறுவதில்லை என்று சொன்னால் சரியல்ல, அவர் 8 வருடம் உரிமம் இல்லாமலேயே கிரசர் நடத்தி வந்தார். நீங்கள் சொன்னபடி 08.09.2022 ஆம் தேதி மாலை 3 மணி அளவில் கனிம வளத்துறையில் இருந்து அன்னை கிரசருக்கு சீல் வைத்ததாக எந்தவொரு சம்பவமும் நடைபெறவில்லை என்றும், நீங்கள் உண்மைக்கு புறம்பாக சொல்லுகிறீர்கள் என்றால் சரியல்ல, சீல் வைப்பதை நான் பார்த்தேன். காவல் துறையினர் சம்பவம் நடந்து 7 நாட்கள் கடந்துதான் உங்களை விசாரித்தார்கள் என்றால் சரிதான். இந்த 7 நாட்களும் நீங்கள், பொன்னுச்சாமி மற்றும் மோகன்ராஜ் ஆகிய மூவரும் பேச்சுவார்த்தையில் இருந்தோம் என்று சொன்னால் நாங்கள் இருந்தோம், ஒருநாள் பார்த்தோம், பேசினோம். அந்த மாதிரி நீங்கள் பேசி ஆலோசனை செய்தகூட நீங்களும், ஜெகநாதனும் இருந்த சமயத்தில்தான் எதிரி செல்வகுமார் குவாரிக்கு உங்கள் முன்னிலையில் சீல்

வைத்ததாக காவல்துறை விசாரணையில் நீங்கள் சொல்லவில்லை என்று சொன்னால் சரியல்ல. ஜெகநாதனை பார்த்து இந்த கிரசர் நடத்துவதற்கு நீங்கள்தான் சிக்கலாக உள்ளீர்கள் என்றும், அதனால் என்னைக்கு இருந்தாலும் உன் சாவு என் கையில்தான் என்று சீல் வைக்கும்போது கூறியதாக காவல் துறை விசாரித்தபோது கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 10.09.2022 ஆம் தேதியன்று வெட்டுகாளிபாளையத்திலிருந்து நீங்கள் பொன்னுச்சாமியும், ஜெகநாதனும் ஒன்றாக சென்ற விபரத்தை காவல்துறை விசாரித்தபோது கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. 10.09.2022 ஆம் தேதி ஜெகநாதனும், பொன்னுச்சாமியும் ஒன்றாக சென்றதை நீங்கள் நேரில் பார்க்கவில்லை என்று சொன்னால் நான் பாாக்கவில்லை, பொன்னுச்சாமி என்னிடம் சொன்னார். பொன்னுச்சாமி என்னிடம் சம்பவத்தை பற்றி சொன்னபோது நீங்கள் எங்கு இருந்தீர்கள் என்றால் வீட்டில் இருந்தேன். பொன்னுச்சாமி வீட்டிற்கும், உங்கள் வீட்டிற்கும் எவ்வளவு துாரம் என்றால் ½ கி.மீ. துாரம் இருக்கும். சம்பவத்தன்று பொன்னுச்சாமி எத்தனை மணிக்கு உங்களுக்கு போன் செய்தார் என்பதை காட்டக்கூடிய உங்களது செல்போனை காவல்துறை வசம் கொடுத்தீர்களா என்றால் காவல்துறை என்னிடம் போனை கேட்கவில்லை, நானும் கொடுக்கவில்லை. எங்கிருந்து எந்த எண்ணில் உங்களை அழைத்தார் என்ற விபரங்களை காவல்துறையினரிடம் நீங்கள் சொல்லியுள்ளீர்களா என்றால் நான் போன் செய்ததை கூறினேன். மோகன்ராஜ் வீடு உங்கள் வீட்டில்

இருந்து எவ்வளவு தூரம் என்றால் 3 கி.மீ. இருக்கும். மோகன்ராஜ் உங்களிடம் நல்ல பழக்க வழக்கமுடையவர் என்றால் அவ்வப்போது பேசுவார். நீங்கள் சம்பவயிடத்திற்கு போனதாக சொல்லும் நேரம் அப்போது எவ்வளவு மணி இருக்கும் என்றால் நான் 5-5 ½ மணிக்கு சென்றேன். நீங்கள் செல்லும்போது அங்கு காவல்துறையினர் இருந்தார்களா என்றால் இல்லை. நீங்கள் செல்லும்போது அங்கு எவ்வளவு கூட்டம் இருந்தது என்றால் அங்கு பொன்னுச்சாமி மட்டும் இருந்தார். ஆம்புலன்ஸ் வரும் வரை யாரும் வரவில்லையா என்றால் ஆம்புலன்ஸ் வந்தபிறகு மோகன்ராஜ் வந்துவிட்டார். நீங்கள், பெரியசாமி, மோகன்ராஜ் சம்பவயிடத்தில் எவ்வளவு நேரம் ஒன்றாக இருந்தீர்கள் என்றால் அரை மணி நேரம் இருக்கும். அந்த அரைமணி நேரத்தில் சம்பவயிடத்தில் எவ்வளவு நபர்கள் கூடினார்கள் என்றால் நாங்கள் இருக்கும்வரை யாரும் வரவில்லை, ஆம்புலன்ஸ் வந்த பிறகுதான் ஊருக்குள் இருக்கும் நபர்கள் வந்தார்கள். ஆம்புலன்ஸ் இருக்கும்போது வந்தார்களா அல்லது போனபிறகு வந்தார்களா என்றால் ஆம்புலன்ஸ் இருக்கும்போது ஊர்க்காரர்கள் 10 பேர்கள் வந்தார்கள். அந்த 10 பேர்கள் உங்களுக்கு தெரிந்தவர்களா என்றால் தெரிந்தவர்கள். ஆம்புலன்ஸ் வந்து ஜெகநாதன் உடலை எடுத்து சென்றுவிட்டார்கள் என்றும், ஆம்புலன்ஸ்க்கு யார் போன் செய்தது யார் என்று எனக்கு தெரியாது என்று நீங்கள் முதல் விசாரணையில் கூறியதுபோல் காவல் துறை விசாரணையில் சொல்லவில்லை என்று

சொன்னால் சரியல்ல, காவல் துறையினர் நான் சொன்னதை எழுதி சென்றார்கள். நீங்கள் மோகன்ராஜ், பொன்னுச்சாமி ஆகியோர் போன் செய்து ஜெகநாதனை ஆம்புலன்ஸ்சில் அனுப்பி வைத்ததாகதான் காவல்துறை விசாரணையில் கூறியுள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. யாரோ போன் செய்து ஆம்புலன்ஸசில் அழைத்து சென்றார்கள் என்ற விபரத்தை நீங்கள் வழக்கிற்கு பின்னிட்டு வழங்கப்பட்ட ஆலோசனைப்படி சாட்சியம் அளித்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. கரூர் அரசு மருத்துவமனைக்கு 7-7.15 மணிக்கு சென்றோம் என்றும், போகும்வழியில் பொன்னுச்சாமி வாந்தி எடுத்துவிட்டார் என்றும், அதன் பிறகுதான் கரூர் மருத்துவமனைக்கு சென்றோம் என்றும், அப்போது ஜெகநாதன் டெட்பாடி வரவில்லை என்று முதல் விசாரணை கூறியதுபோல் காவல்துறை விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. கரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு சென்று திரும்பி வந்தோம் என்று முதல் விசாரணை கூறியதுபோல் காவல்துறை விசாரணையில் கூறவில்லை என்று சொன்னால் சரியல்ல. தூள் சண்முகம் காட்டிலிருந்து கரூர் அரசு மருத்துவமனை எவ்வளவு தூரத்தில் இருக்கும் என்றால் 30 கி.மீ. இருக்கும். அது தூள் சண்முகம் காட்டிலிருந்து தெற்குப்பக்கம் செல்லவேண்டும் என்றால் சரிதான். வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனைக்கு செல்லவேண்டும் என்றால் தூள் சண்முகம் காட்டிலிருந்து வடக்குப்பக்கம் செல்லவேண்டும் என்றால் சரிதான். தூள்

சண்முகம் காட்டிலிருந்து வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை எவ்வளவு தூாரம் இருக்கும் என்றால் 25 கி.மீ. இருக்கும். கரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை செல்லவேண்டுமெனில் தூாள் சண்முகம் காடு வழியாகதான் செல்லவேண்டும் என்றால் அவ்வாறு செல்ல நான்கு வழிகள் உள்ளது. கரூர் அரசு மருத்துவமனையிலிருந்து வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை எவ்வளவு தூாரம் இருக்கும் என்றால் 30-32 கி.மீ. இருக்கும். உங்களுக்கு முதன் முதலில் புகார் தயார் செய்யப்படும்போது அதை நீங்களோ, பொன்னுச்சாமியோ, மோகன்ராஜோ, சம்பவத்தை நேரில் பார்க்காத சாட்சிகள் என்று சொன்னால் தவறு. நீங்கள் யாரும் பார்க்காமல் காவல்துறை தகவல் கிடைத்து சம்பவயிடம் வந்து ஆம்புலன்ஸ் மூலமாக இறந்த ஜெகநாதன் உடலை கரூர் மருத்துவகல்லூாரி மருத்துவமனைக்கு அனுப்பும்போது இறந்துபோனவர் ஜெகநாதன் என்று யாருக்கும் தெரியாது என்று சொன்னால் சரியல்ல, ஆம்புலன்ஸ்சில் பாடியை எடுத்து சென்றார்கள், நான் பின்னால் சென்றோம். நீங்கள் சொன்ன மாதிரி ஆம்புலன்ஸ் பின்னால் செல்லவில்லை என்பதால்தான் இறந்தவர் பெயர் பெயர் தெரியாத, விலாசம் தெரியாத ஆண்பிணம் என்ற குறிப்பு உள்ளது என்று சொன்னால் சரியல்ல, ஆம்புலன்ஸ்காரர்கள்தான் அங்கு சேர்த்தார்கள். அரசு மருத்துவமனையில் கொண்டு வரப்பட்ட ஆண் பிரேதம் பெயர் மற்றும் விலாசம் தெரியாத பிணம் என்று குறிப்பிடப்பட்டுள்ளது பின்னால்

தெரிந்துகொண்ட பிறகு அதை எவ்வாறு சரிசெய்து நீங்கள் பார்த்ததைபோல் காட்டவேண்டும் என்பதற்காக நீங்கள் புதிதாக பின்னால் வந்த பொன்னுச்சாமி வாந்தி எடுத்துவிட்டார் என்றும், நாங்கள் வேலாயுதம்பாளையம் அரசு மருத்துவமனை சென்று வந்தோம் என்று சொல்லிக்கொடுத்தாற்போல் கூறுகிறீர்கள் என்றால் சரியல்ல. நீங்கள் பொன்னுச்சாமி, மோகன்ராஜ் ஆகிய மூவரும் எங்கிருந்தீர்கள் என்பதை செல்போன் டவரை வைத்து பார்த்தால் தெரியும் என்று சொன்னால் சரியல்ல, நான் வீட்டில் இருந்தேன். 10.09.2022 ஆம் தேதி நீங்கள் மூன்று பேரும் சம்பவயிடத்திற்கு வரவில்லை என்று சொன்னால் சரியல்ல. உங்களுடைய செல்போனை கைப்பற்றிய காவல்துறையினர் நீங்கள் எங்கிருந்தீர்கள் என்பதை CDR போட்டு கால் Details பெற்றுவிட்டு, அதனை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அதனை மறைத்துள்ளீர்கள் என்று சொன்னால் சரியல்ல. நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள 19 வது ஆவணம் அழைப்பு விபரம் பற்றி உள்ளது என்று சொன்னால் எனக்கு தெரியாது. அந்த விபரம் சேகரித்து பார்க்கும்போது அரசு தரப்பிற்கு எதிராக இருந்ததால் அந்த ஆவணம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் அதுபற்றி எனக்கு தெரியாது. நீங்கள் 2019 ஆம் வருடம் நடந்ததாக சொல்லப்படும் சம்பவத்திற்கும் நேரடி சாட்சி கிடையாது என்றும், இந்த வழக்கிலும் சித்தரிக்கப்பட்ட சாட்சி உள்ளது என்று சொன்னால் அது பொய். நீங்கள் சொல்வதுபோல் நீங்கள் போன சமயத்தில் எந்த ஆம்புலன்ஸ்சும்

வரவில்லை என்றும், எந்த உடலும் கிடக்கவில்லை என்றும், இந்த வழக்கை வழு சேர்ப்பதற்காக நீங்கள் கும்பலாக இருப்பதால் உங்களை சாட்சிகளாக போட்டுள்ளார்கள் என்றும், உங்கள் சாட்சியம் உண்மைதன்மை உடையதல்ல என்று சொன்னால் சரியல்ல.

முடியும் நேரம் **1.15** மணி

**3** ஆம் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

**(**வழக்கறிஞர் திரு**.**சந்திரன்**)**

இல்லை.

ஒம்/.K.H.இளவழகன்
முதன்மை மாவட்ட நீதிபதி,
கரூர்.